00067

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் - மட்டம்-4**
**இறுதிப் பரீட்சை – 2018/2019**

# ESD2230/EPD4530: பிள்ளை விருத்தி II

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

| திகதி: 26.09.2020 | நேரம்: பி.ப.01.30 – பி.ப.04.30 |
|---|---|

**பகுதி I இல் அனைத்து வினாக்கட்கும், பகுதி II இல் எவையேனும் (03) மூன்று வினாக்கட்கும் விடை தருக.**

## பகுதி I

01. நரம்பணுவின்(Neuron) வகைகள் **மூன்றினை(03)** பெயரிட்டு அவற்றில் ஒரு வகையான நரம்பணுவின்(Neuron) பங்கை விளக்குக.

02. பிட்யூட்டரி சுரப்பியின் தொழிற்பாட்டை விளக்குக.

03. மாணவரிடத்தே புலக்காட்சி எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

04. **'அவதானிப்பு கற்றல்'** எனும் பதத்தை விளக்குக.

05. ஒரு தூண்டலின் செறிவானது கவனத்தை எவ்வாறு பாதிக்கின்றதென்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

06. பிரய்ட் கோட்பாட்டினடிப்படையில் ஆளுமையின் மூன்று(03) முக்கிய கூறுகளின் தொடர்புகளை விபரிக்குக.

07. ஆசிரியர் என்ற வகையில் நேர்மறையான தூண்டலை எவ்வாறு மாணவர்களுக்கு வழங்குவீர் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

08. கற்றல் - கற்பித்தல் செயல்முறையின் கொள்கையை ஆசிரியராக நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை உதாரணத்துடன் மேற்கோட்காட்டி விளக்குக.

**(8x5=40 புள்ளிகள்)**

## பகுதி II

09. i. மாணவர்களின் கவனத்தை பாதிக்கும் வெளிப்புற காரணிகள் **ஐந்தினை(05)** விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. மாணவர்களின் கற்றல் செயல்முறையை கவனம் எவ்வாறு பாதிக்கின்றதென்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10. i. கோட்பாட்டடிப்படையில் ஆளுமையின் பண்புகள் மற்றும் ஆளுமையின் வகைகளை சுருக்கமாக விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**

ii. மாணவர்களின் கற்றல் செயல்முறையை எளிதாக்குவதற்கு ஆளுமை பண்புகள் மற்றும் ஆளுமை வகைகளின் கோட்பாடுகளை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள் என்பதை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

11. i. ஆரம்ப பாடசாலை கற்றலை கற்பிக்க நீங்கள் பயன்படுத்த விரும்பும் நடத்தை தழுவல் முறையை எழுதுக.

**(03 புள்ளிகள்)**

ii. நீர் மேற்குறிப்பிட்ட நடத்தை தழுவல் முறையின் முக்கிய கொள்கையினை கலந்துரையாடுக.

**(07 புள்ளிகள்)**

iii. நீர் மேற்குறிப்பிட்டு தெரிவு செய்த முறைகளினடிப்படையில் பிள்ளைகள் கற்க உதவுவதில் ஆரம்ப பாடசாலை ஆசிரியராக உமது வகிபங்கினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. i. பதகளிப்பு வேறுபாட்டு குழப்பம் (Separation Anxiety Disorder) என்றால் என்ன?

**(04 புள்ளிகள்)**

ii. பதகளிப்பு வேறுபாட்டு குழப்பத்திற்குரிய (Separation Anxiety Disorder) ஒரு குழந்தையின் அறிகுறிகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. ஒரு பிள்ளை பதகளிப்பு வேறுபாட்டு குழப்பத்தால் பாதிக்கப்படுவதை தடுக்க ஆசிரியராக நீர் மேற்கொள்ளும் நடவடிக்கையை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. i. மாணவர்களின் உளவியல் கோளாறுகளில் குடும்பச்சூழல் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றதென்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பெற்றோராக மாணவர்களது உளவியல் கோளாறுகளை குறைப்பதற்கு நீங்கள் எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

பதிப்புரிமை பெற்றது